www.tamilarangam.net

இலங்கையில்

# ஈழவர் இன்னல்

உருப்பெற்ற விதம்

இ. இரத்தினசபாபதி

"நாங்கள்" வெளியீடு:
மாணவர் இளைஞர் பொதுமன்றம் GUYS.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் ஈழவர் இன்னல் உருப்பெற்ற விதம்

''பத்து லட்சம் மக்களது வாக்குரிமையைப் பறித்த குடியுரிமைச் சட்டத்தாற் செய்ய முடியாததை, அரசின் குடியேற்றத்திட்டங்கள் உருவாக்கத் தவறியதை, அரசின் மொழிச்சட்டங்கள் ஏற்படுத்தத் தவறியதை அரசின் தரப்படுத்தல் திட்டம் ஏற்படுத்தியது. அது இளைஞர்களைத் தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளியது. [illegible] தமிழர் வரலாற்றில் ஒரு புதிய யுகம் ஏற்பட்டது.''

– இ. இரத்தினசபாபதி

இரண்டாம் உலகப் பெரும்போரின் முடிவில் ஆசிய நாடுகளின் எதிர்காலத்தை மதிப்பீடு செய்த சமூகவியலாளர் இலங்கை, இந்திய துணைக்கண்டத்தில் முக்கிய நாடாக அமையுமென்றும் அப்பகுதியிலுள்ள பிறநாடுகளின் முன்னேற்ற வேகத்தைத் தீர்மானிக்கும் நாடாக அது அமையுமென்றும் உணர்ந்தனர். அப்பொழுதே சமூகவியலாளரிடையேயும் பொருளியல் நிபுணரிடையேயும் இத்தகைய மனப்பதிவை உருவாக்கக் கூடிய நிலை இலங்கையில் நிலவியது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை ஒரு குட்டித்தீவு. ஏறத்தாழ ஒரு கோடி மக்கள் இங்கு வாழ்கிறார்கள். அது 25,000 சதுரமைல் பரப்பளவுடையது. ஒரு சில மணிநேரம் பயணம் செய்யும் ஒருவர் அங்கு பல்வேறு காலநிலைகளையும் உணரமுடியும். மீன்களின் வளம் மலிந்த அழகிய கடல் சூழ்ந்த நாடு இலங்கை. இங்கிருந்து தேயிலை, இரப்பர், தெங்குப்பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. உணவுப் பயிர்ச்செய்கையில் இலங்கை பெருமளவில் தன்னிறைவு கண்டுள்ளது. அலைஅலையான மேடுபள்ளங்களையுடைய அதன் தோற்றத்தில் குறுக்கும் நெடுக்குமாகப் பாயும் வற்றாத உயிர் ஆறுகள் பல இங்குள்ளன. அதன் வளத்தைக் கண்டு பொறாமைப்படும் நாடுகள் பல.

இங்கு சிங்கள பௌத்த மக்கள் பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். இவர்கள் வங்காள அரச பரம்பரையிலிருந்து வந்ததாகக் கூறிக்கொள்கின்றனர். சிங்கள மக்கள் மலையகக் கண்டிச் சிங்களவர், கரைநாட்டுச் சிங்களவர், என்று பாகுபட்டுள்ளனர். இவர்களோடு விவேகமும் கடின உழைப்புமுள்ள தமிழ் மக்கள் கூடி வாழ்கின்றனர். இவர்கள் வடக்கு, கிழக்கு மாநிலங்களில் மிகப் பெருந்தொகையினராக வாழ்கின்றனர். இலங்கைத் தமிழருக்குத் தனியான வரலாறும் மரபுகளும் பண்பாடும் உண்டு. ஆரம்ப காலப் பிரித்தானியத் தோட்ட முதலாளிகளால் இலங்கையின் மலையகத் தோட்டங்களில் கொத்தடிமைப் பணிசெய்யப் பெருமளவில் குடியமர்த்தப்பட்ட மலையகத் தமிழரும் இங்கு வாழ்கின்றனர். ஆதியில் இந்தியாவிலிருந்து வந்த தமிழ்பேசும் முஸ்லிம்களும் இங்கு வாழ்கிறார்கள். சிலர் தம்மை அரேபியாவிலிருந்து வந்த 'மரக்கலராயர்' என்பர். பிரித்தானிய ஆட்சிக்கால ஆரம்பத்தில் நகர்காவலராக வந்தோரின் வழித்தோன்றல்களான மலே மக்களும் இங்கு உள்ளனர். டச்சுக்காரரின் வழித்தோன்றல்களான பரங்கியர் இங்கு மிகக் குறைவாக வாழ்ந்தபோதிலும் பொது வாழ்வில் முக்கியத்துவம் பெற்றுள்ளனர். இங்கு வேடர்



என்ற இனக்குழு மக்களும் வாழ்கின்றனர். நாகரீகம் தீண்டாத இவர்கள் அம்பும் வில்லும் ஏந்தியவராகவே வாழ்ந்து வருகின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரித்தானியர் வருமுன்னர் தமிழர், சிங்களவர் ஆகிய ஈரினத்தவர் இங்கு தனித்தனி கொடியோடும் முடியோடும் கோலோச்சினர். தெற்கிலும் மத்தியிலும் சிங்கள அரசுகள் செல்வாக்குப் பெற்றிருந்தன. வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் ஆண்டனர். நாட்டின் இதயமான கண்டிப்பகுதி அரசில் தமிழரசர் ஆண்டனர்.

இங்கு மக்களின் வாழ்க்கை பன்முகப்படுத்தப்பட்டதாகவும் சீரோடும் அமைந்தது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுமுன் இங்கு வாழ்ந்த மக்களின் சமூக நிலை ஆய்வு அவசியமில்லை என எண்ணுகிறேன். இவ்விடுதலைக்குத் தமிழரும் சிங்களவரோடு சரிநிகர் சமானமாக நின்று போராடினர் என்பது மட்டும் இங்கு போதியதாகும். சேர். பொன். இராமநாதன் முதலிய தீரர்கள் இப்போராட்டத்தில் முன்னணியில் நின்றனர். இவர் சிங்களவரின் முன்னேற்றத்திலும் அக்கறைகாட்டினார். இன்று தமிழரை ஈவிரக்கமின்றிப் பலியெடுக்கும் சிங்களவருக்காக பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தமிழர்கள் போராடினார்கள் என்பதை இன்றைய சூழலில் யார்தான் நம்புவர்? அரசியற் போராட்டங்களுக்கு முன் 1915 இல் இலங்கையின் முதலாவது இனக்கலவரம் மூண்டது. சிங்களவருக்கும் தமிழ் பேசும் முஸ்லிம்களுக்குமிடையே இது நிகழ்ந்தது. சேர். பொன். இராமநாதன் முதலியோரே இங்கிலாந்து வரை சென்று பிரித்தானிய மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சிங்களவர்களின் சார்பில் வாதாடினார்கள். இன வேறுபாடற்ற நிலையில் நாட்டுக்குத் தொண்டாற்றிய சேர். பொன். இராமநாதனுக்குச் சிங்களமக்கள் நாட்டின் பாராளுமன்றத்தின் முற்றத்தில் சிலை நாட்டிச் சிறப்புச் செய்தார்கள். ஆனால் வகுப்புவாத அலை அவரை மூழ்கடிக்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கத் தவறவில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அவரும் இணைந்து நிறுவிய இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்தே அவர் விலகநேர்ந்தது. அவரது தம்பியாராகிய சேர். பொன். அருணாசலம் தமிழர் தேசிய மகாசபையை நிறுவ நிர்ப்பந்திக்கப்பட்டார். இன்றைய பகைமைக்கான மூலவித்துக்கள் அன்றே தூவப்பட்டன. அவை இன்று அழிக்கமுடியாப் பெருமரங்களாக வளர்ந்தோங்கியுள்ளன.

முன்னர் குறிப்பிட்டதுபோல சிங்களவரிற் பெரும்பான்மையினர் பௌத்தர்கள். அவர்களிற் குறிப்பிடத்தக்க தொகையினர் கிறிஸ்தவர்களாகவும் உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் கரையோரப் பகுதிகளில் வாழ்கின்றனர். தமிழரைப்போலவே சிங்களவரும் தமக்குச் சிறப்பான பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் கொண்டுள்ளனர். இரு சமூகத்தினரும் மற்றைய சமூகத்தினரின் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் மதித்து வாழ்ந்தனர். மிதித்து நடக்க முயலவில்லை. இதனால் இரு சமூகத்தினரிடையேயும் வகுப்பு எல்லைகளுக்குட்பட்ட அளவில் ஒற்றுமை காணப்பட்டது. எனினும் அரசியலாளர்கள் இரு சமூகத்தினரும் சமாதான சகவாழ்வு வாழ்வதற்கு எதிராகவே இருந்தனர். நிலமானிய அரசுக்காலத்து அரசர்களான துட்டகைமுனு – எல்லாளன் முதல் மக்களாட்சி நிலவுவதாகக் கூறப்படும் இன்றைய ஜயவர்த்தன வரை இதுவே உண்மை நிலையாகும்.

**1940** களின் பிற்பகுதியில் இந்துப்பெருங்கடற் பகுதியில் இந்தியாவின் விடுதலையைத் தொடர்ந்து பல சுதந்திர நாடுகள் உருவாகின. இம்மாற்றம் இலங்கையின் போக்கிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. உறங்குநிலையிலிருந்த குறுகிய வெறிகொண்ட சிங்களநாட்டுப்பற்று வெறிகொண்டெழுந்து சில பகுதிகளில் தமிழ்ச்சமூகத்தின் வாழ்வுக்கே அச்சுறுத்தலாக அமைந்தது.

இலங்கையில் சுதந்திரப் போராட்டம் நடைபெறவில்லை. ஒரு சொட்டு இரத்தம்கூட சிந்தப்படவில்லை. சூரி



யன் அஸ்தமிக்காத பிரித்தானிய பேரரசின் ஆதிக்கக் கதிரவன் மெல்லமெல்ல மறையத் தொடங்கியபோது ஏனைய நாடுகளோடு சேர்த்து இலங்கைக்கும் விடுதலை வழங்கப்பட்டது. பிரித்தானிய ஆதரவாளர்கள் ஏமாற்றம் அடையும் வகையில் 1948 பெப்ரவரியில் இலங்கைக்கு அரசியல் விடுதலை கிடைத்தது இலங்கைக்கு விடுதலை அளித்த பிரித்தானியப் பாராளுமன்றம் இலங்கைப் பிரதிநிதிகள் சபையில் தமிழருக்குச் சமமான உறுப்புரிமை இருக்காது; சிங்களவரே எப்போதும் மேலாதிக்கம் செய்யவேண்டுமென்பவற்றை உறுதிசெய்தது. ஆகவே வசதியான போதெல்லாம் (சிங்களப்) பிரதமர்கள் தனிச் சிங்கள அமைச்சரவைகளை உருவாக்கினர்.

இலங்கையின் பொருளாதார வளத்துக்குப் பரம்பரை பரம்பரையாக வாழும்போது குருதியையும், வியர்வையையும், கண்ணீரையும் இறந்தபோது முழு உடலையும் உரமாக வழங்கியவர்கள் மலையக இந்திய மரபுவழித் தமிழர்கள். பத்து லட்சம் மலையகத் தமிழரின் வாக்குரிமை, குடியுரிமைகளைப் பறிக்கும் சட்டத்தையே சுதந்திரம் பெற்றபின் முதன்முதலில் அமைந்த பிரதிநிதிகள் சபை முதல் நடவடிக்கையாக மேற்கொண்டது. இதுவே தமிழருக்கெதிராகச் சிங்கள அரசு வெளிப்படையாக மேற்கொண்ட எதிர்நடவடிக்கையாகும். கல்வியறிவில் இப்பிராந்தியத்தில் யப்பானுக்கு அடுத்த நிலையில் இருப்பதாகப் பேசிக்கொள்ளும் அரசு மலையகத் தமிழரின் கல்விக்காக எதையுமே செய்யவில்லை. இன்றும் கூட தமது சொந்தப் பெயரையே எழுதத் தெரியாத இளைஞரும் இளம் பெண்களும் மலையகத்தில் உள்ளனர். 1948ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டம் அவர்கள் மீது திணித்த துன்பியல் நாடகம் இது. ஒரு சமூகம் முழுவதினதும் மனித அபிவிருத்தி முதலாவது சிங்கள அரசினால் திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இதன் மூலமாக அரசு, மிகப் பெருந்தொகையான தொழிலாளர்கள் தேசிய நடவடிக்கைகளில் ஈடுபடாது திறமையுடன்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தடுத்துவிட்டது. இதன் மூலம் மலையகத் தமிழருக்கும் ஏனைய தொழிலாளருக்குமிடையே மேலும் பிளவை ஏற்படுத்த உதவியது.

ஆசியநாடுகளில் சுதந்திரத்திற்குப் பின் விவேகத்திற்கு தரநிர்ணயம் செய்யும் முறை திணிக்கப்பட்டது. ஏனைய இனங்களுடன் பெரும்பான்மை இனத்தினர் பதவி உயர்வு, பதவி நியமனம் போன்றவற்றுக்கான பரீட்சைகளில் நேரடியாகப் போட்டியிட முடியாத நிலையில் ''மண்ணின் மைந்தர்கள்'' என்ற தீயமுறை நடைமுறைப்படுத்தப்பட்டது. ''பூமி புத்திரர்கள்'' என்ற திட்டம் இலங்கையில் உத்தியோக மொழிச்சட்டம் என்ற வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

முன்னர் நான் குறிப்பிட்டபடி பெரும்பான்மையினரான சிங்களவரைவிட தமிழர், பறங்கியர், முஸ்லிம்கள், மலேயர் ஆகியோரும் இலங்கையில் வாழ்கின்றனர். தமிழர் உயர்பதவி வகிப்பதைத் தடுக்கவும் அரசாங்கப் பதவிகளைப் பெறுவதைத் தடைசெய்யவும் பதவி உயர்வுகளைப் பெறுமற் பார்த்துக் கொள்ளவும் 1956ல் சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் தமிழரான அரச ஊழியர்கள் குறித்த காலத்தில் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டுமென விதிக்கப்பட்டது. அரச சேவையில் நியமனம் பெறச் சிங்களத்தில் அடிப்படைத் தகைமை அவசியமானது. இவையெல்லாம் தமிழர் அரச சேவைகளில் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களம் தேர்ச்சி பெறுததால் சம்பள உயர்வையும் பதவி உயர்வையும் இழந்தனர்.

மொழிச்சட்டத்தால் ஏற்பட்ட விளைவுகளுக்கெதிராக நீதிமன்றம் சென்றபோது சேவையிலிருப்போருக்கு மொழிச்சட்டத்தை முன்னேக்கி நடைமுறைப்படுத்தல் அரசியல் யாப்புக்கு முரணானதென்றும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும் நீதிமன்று தீர்ப்பளித்தது. அரசு சட்டத்தைத் திருத்துவதற்குப் பதிலாக அரசியல் யாப்பைத் திருத்தியது. இலங்கையில் சிங்கள அரசுகள் நீதிமன்றுகளுக்கு அளிக்கும் மதிப்புக்கு இச்செயலே சிறந்த உரைகல்லாகும்.



தமிழர் பெரும்பான்மையினராக வாழும் மரபுவழிப் பிரதேசங்களின் குடிப்பரம்பல் அமைப்பை மற்றும் நோக்குடன் அரசு திட்டமிட்டமுறையில் தொடர்ச்சியாகச் சிங்களக் குடியேற்றங்களை நடத்திவந்தது. பாராளுமன்றத்தில் தமிழரின் பலத்தைக் குறைத்து அவர்களைப் பலவீனப்படுத்தவும், இலங்கை முழுவதும் சிங்களவரின் செல்வாக்கை நிலைநிறுத்தவும், சிங்களக் குடியேற்றங்கள் ஈழப் பகுதிகளில் ஏற்படவும் வழிவகுத்தன 1948ல் மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறித்த சட்டம் பாராளுமன்றத்தில் தமிழரின் பலத்தை அரைப்பங்காகக் குறைத்தது. இதனை மேலும் குறைக்கும் நோக்குடன் வட, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மக்களாட்சியின் அனைத்து நியமங்களையும் மாசுபடுத்தும் வகையில் அரசு பௌத்தம் மட்டும் அரசமதமெனப் பிரகடனப்படுத்தியது. இதனால் பௌத்த பிக்குகள் முன்னணிக்கு வந்தனர். அவர்களிற் பெருந்தொகையானேர் அரசியலில் தீவிர பங்குகொண்டனர்.

இச்செயல்களோடு திருப்தியடையாத பண்டாரநாயக்கா அரசு (1956—1958) தமிழருக்கு ஆத்திரமூட்டும் பல சட்டங்களை ஆக்கியது. வண்டி வகைகளின் பதிவிலக்கங்களில் ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாகச் சிங்கள ஸ்ரீ எழுத்தைப் பயன்படுத்தும் சட்டம் நீறுபூத்துக்கிடந்த தமிழர் எதிர்ப்புணர்வை மூண்டெரியச்செய்தது. சிங்கள ஸ்ரீ இலக்கம் பொறித்த வாகனங்கள் யாழ்ப்பாணம் வந்தபோது ஆத்திரங்கொண்ட தமிழ் மக்கள் சிங்கள ஸ்ரீ மீது தார்பூசி அதன் மீது தமிழ் ஸ்ரீ எழுத்தைப் பொறித்தனர். இதனைத் தொடர்ந்து தென்னிலங்கையில் காடையர் தமி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூர்களைக் கொன்று, கடைகளையும் வீடுகளையும் கொள்ளை யிட்டுக் கலகம் செய்தனர். இது 1958 இல் நிகழ்ந்தது. இலங்கை தென்னாசிய நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் என்ற சமூகவியலாளரதும் பொருளியலாளர்களி னதும் நம்பிக்கை இதனால் முற்றாகத் தகர்ந்து அழிந்தது.

இவ்வாறு பண்டாரநாயக்கா அரசு தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே தீராப் பகையை மூட்டியது. சமூக மட்டத்தில் இரு சமூகங்களும் சமாதான சகவாழ்வு நிகழ்த் திய போதிலும் அரசியல் முனையில் அவர்கள் எதிர் முனை களில் நின்றனர். துட்டகைமுனுவின் கதை இதை மிகச் சிறப்பாக விளக்குகிறது. இச்சிங்கள இளவரசன் கால், கை களை முடக்கிக் கொண்டு படுத்திருந்தபோது அவ்வாறு படுத்திருப்பதற்குக் காரணம் கேட்டபோது ஒரு பக்கத்தில் கடலும் மறுபக்கத்தில் தமிழரும் நெருக்கும்போது நான் எவ்வாறு கைகால்களை நீட்டிக்கொண்டு படுக்க முடியும் என்று அவன் கேட்டதாக கர்ண பரம்பரைக் கதை கூறுகி றது. வடமத்திய மாநிலத்திலுள்ள அனுராதபுரத்தில் துட்ட கைமுனு எல்லாளனை அழித்தான். அந்தக்கால முதலே ஈரினங்களும் ஒன்றையொன்று சந்தேகக் கண்ணோடும் பகைமையோடும் நோக்கின.

பிரித்தானிய அரசுக் காலத்திலும் சுதந்திரத்தின் பின்னரும் தமிழர் அரசாங்க சேவைகளில் அளவுக்கதிக மான பதவிகளைப் பெற்றிருந்தனர் என்ற விடயமும் சிங்க ளவர் தமிழருக்கெதிராக போர்க்கொடி உயர்த்த முக்கிய காரணமாக அமைந்தது. இது பிரித்தானியர் தமிழருக்கு வழங்கிய சலுகையல்ல; பிரித்தானும் தந்திரத்தின் வெளிப் பாடாகும். வடக்கிலும் கிழக்கிலும் மிகச் சிறந்த கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தன. இவை அரச சேவைக ளுக்குப் போதிய ஆளணியை வழங்கிக் கொண்டிருந்தன. அவர்களுட் பலர் தளரா ஊக்கத்தினாலும் கடின உழைப் பாலும் உயர் பதவிகளுக்கு உயர்ந்தனர். சிங்களவர்களுக்கு இத்தகைய கல்வி வசதிகள் இருக்கவில்லை. அவர்கள் அரச



பதவிகளை நாடிச் செல்லவுமில்லை. அரச சேவையில் நிலவிய தமிழர் மேலாதிக்கம் சிங்களவரை வெறுப்படையச் செய் தது. வகுப்பு வெறிகொண்ட சிங்கள இயக்கங்கள் தமிழ ருக்கெதிரான இவ்வுணர்த்திக்கு எண்ணெய் ஊற்றி வளர்த்து வந்தனர். சிங்களவரை பெரும்பான்மையினராகவும் பௌத் தரை ஆதிக்கம் பெற்றவர்களாகவும் கொண்டுள்ள ஒரு நாட்டில் சிங்களவரல்லாத, பௌத்தரல்லாத உயர் அதிகா ரிகள் செல்வாங்குப் பெறக்கூடாதென அவர்கள் வாதிட்ட னர். அரச சேவையில் தமிழர் முதன்மை பெற்றுள்ள நிலைமை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு சந்தர்ப் பம் எதிர்பார்க்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் பண்டார நாயக்காவின் பிரசார அணியில் பௌத்த பிக்குகள் முன்னணியில் நின்றனர். 24 மணி நேரத்தில் சிங்களம் ஆட்சியாகும். ஒரே நாளில் பௌத்தம் அரசமதமாகும் என்ற முழக்கம் முன்வைக்கப்பட்டது. இலவச அரிசி வழங் குவோமென்ற பிரசாரம் கூட மொழி, மதம் என்ற முழக் கங்கள் பெற்ற அளவு செல்வாக்கைச் சிங்கள மக்களிடம் பெறவில்லை. இவ்வகையில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நிரந்தரமாகப் பிரிந்து செல்ல உறுதியான முடிவு எடுத்த தற்கு பண்டார நாயக்காவே வழிவகுத்தார். அன்று முதல் பிரிவினைக்கான உணர்வுகள் வளர்ந்து உறுதி பெற்றன.

தமிழரை அவர்களது மரபுவழித்தாயகத்தில் அடிமை களாக, பணியாளர்களாக ஆக்கவும் பிறந்த மண்ணிலேயே அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாகவும் அவர்களில் அரைப்பங்கினரைக் குடியுரிமை, வாக்குரிமை அற்றவர்க ளாக ஆக்கவும் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் எண்ணற்றவை. இந்த அவமதிப்புக்கள் துன்புறுத்தல்கள் அனைத்தையும் தமிழர்கள் மன உறுதியோடும் துன்பங் களால் துவண்டு போகாமலும் நின்று தமக்கு இழைக்கப் பட்ட அநீதிகளுக்கெதிராக குடியாட்சி மரபுகளுக்கும் சட்ட வரம்புகளுக்கும் உட்பட்டுப் போராடி வந்தனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒன்றன்பின் ஒன்றாக வந்த அரசுகளின் தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்துச் சென்றபோது சிங்களச் சக்திகள் அனைத்தும் துருவநிலைப்பட்டு ஒரே அணியில் இணைந்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒன்றுக்கு ஒன்று நேரெதிரான அரசியல் சிந்தனைகளைக் கொண்டோர், வலது சாரிகள், இடது சாரிகள், மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகிய அனைவரும் (சிங்கள நோக்கில்) ஒருவரோடு ஒருவர் இணையத் தொடங்கினர். இவ்வகையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கூட்டு அரசு அமைந்தது. இவ்வரசில் பன்முகப்பட்ட சக்திகள் ஒன்றிணைந்திருந்தன. திருமதி பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி அரசிலும் முதலில் லங்கா சமசமாசக்கட்சியும் பின்னர் லங்கா சமசமாசக்கட்சி, கொம்யூனிஸ்ற்கட்சி என்பனவும் இணைந்திருந்தன. இவற்றுக்கிடையில் தத்துவார்த்த ஒருமைப்பாடு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் பேசும் மக்களுக்கெதிராக மேலும் மேலும் கஷ்டங்களைச் சுமத்துவதே இக்கூட்டின் ஒன்றுகூடலுக்குக் காரணமாகும்.

சிங்களக் கட்சிகள் துருவநிலைப்பட்டுக் கூட்டணியாக அமைந்தபோது அதற்குப் பதிலடிபோல தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரசு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு ஆகிய தமிழ்க் கட்சிகள் தமிழர் கூட்டணியாக ஒன்றிணைந்தன. தமிழரின் உரிமைகளுக்கு ஆபத்து ஏற்படாமலும் புதிய பாதிப்புகள் ஏற்படாமலும் காப்பதே இக்கூட்டணியின் முக்கிய நோக்கமாகும்.

தமிழர் கூட்டணியின் தோற்றம் சிங்கள ஆதிக்க அலையின் போக்கை மாற்றவில்லை; தமிழர் செல்லும் இருண்ட பாதையின் அந்தத்தில் ஒளியைக் காட்டவில்லை. இளைஞர்களுக்கும் இது வழிகாட்டவில்லை. தீமை செய்வதில் உறுதியாக நின்ற அரசு தமிழருக்கு எதிராக மேலும் ஒடுக்குமுறைகளையும் பாகுபாடுகளையும் கஷ்டங்களையும் திணித்துக் கொண்டே இருந்தது. தரப்படுத்தல் என்ற பாகுபாடு காட்டும் முறை தமிழ் இளைஞர்களின் முதுகெலும்பை



முறிக்க முயன்றது. தமிழ் மாணவர் பல்கலைக்கழகம் செல்வதைத் தடுக்க முயன்ற இம்முறை இளைஞரின் வெறுப்பு வெள்ளத்தின் அணைக்கட்டை உடைத்துவிட்டன. தமிழ் இளைஞர் விடா முயற்சியாலும் ஊக்கத்தாலும் மருத்துவம், பொறியியல் முதலிய துறைகளுக்குப் பெருமளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தரப்படுத்தல் மூலம் இத்துறைகளின் கதவுகள் தமிழருக்கு மூடப்பட்டன. தரப்படுத்தல் மூலம் ஒரு துறைக்குச் செல்லும் தமிழ் மாணவன் அதே 'துறைக்குச் செல்லும் சிங்கள மாணவனைவிட மூன்று மடங்கு அதிக புள்ளிகளைப் பெறவேண்டுமென விதித்தது. இவ்வகையிடல் மூலம் தமிழருக்கான பல்கலைக்கழக வீதி மூடப்பட்டது.

இளைஞர்கள் பிரச்சினையைத் தீவிரமாக ஆராய்ந்தனர். தாம் திசைமாறும் சந்தியில் இருப்பதாக அவர்கள் உணர்ந்தனர். இளைஞர்கள் உள்ளத்தில் ஏமாற்றமும் விரக்தி நிலையும் ஏற்பட்டன. தலைவர்கள் தமக்கு வாக்களிக்கப்பட்டதாயக விடுதலைக்கு வழிவகுக்கவில்லை என்பதும், தமது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகிவிட்டது என்பதுமே அவர்களது விரக்தி நிலைக்குக் காரணமாகும். இளைஞர்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டனர். அது அவர்கள் வாழ்க்கைப் பிரச்சினையாக அமைந்தது. அரசு இறுதியாக அதிகம் புண்படுத்தத் தாக்கவேண்டிய சரியான இடத்தை இனங்கண்டு கொண்டது. இளைஞர்கள் அரசு இனிமேலும் நீதி நியாயத்துக்குக் கட்டுப்படப்போவதில்லை என்ற முடிவுக்கு வந்தனர். உடனடியாகத் தலையிட்டு அரசின் போக்கைத் தடுத்து நிறுத்தினால் அன்றி எதிர்காலச் சந்ததியினர் மண்ணைக் கிளறுபவராகவும் நீரை அள்ளுபவராகவும் உழல நேரிடும் என்பதை உணர்ந்தனர். தனிநாடே இப்பிரச்சினைக்குத் தீர்வு என்பது அவர்களது முடிவாக அமைந்தது. தனிநாடு ஒன்று உருவாகினால் மட்டுமே தமிழர் கௌரவத்தோடு, பொருளாதார நல்வாழ்வுடனும் மொழி, பண்பாட்டு உயர்வோடும் வாழமுடியும் என்பதை அவர்கள் உணர்ந்தனர்.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பத்து இலட்சம் மக்களது வாக்குரிமையைப் பறித்த குடியுரிமைச் சட்டத்தைச் செயற்படுத்தியதை, அரசின் குடியேற்றச் சட்டங்கள் ஏற்படுத்தத் தவறியதை, அரசின் தரப்படுத்தல் திட்டம் ஏற்படுத்தியது. அது இளைஞர்களைத் தனிநாடு கேட்கும் நிலைக்குத் தள்ளியது, சிரமமிக்க குழப்பமுடைய தமிழர் வரலாற்றில் ஒரு புதுயுகம் ஏற்பட்டது.''

இந்த இடத்தில் இடைச்செருகலாக இலங்கை வரலாற்றின் மிக்க நெருக்கடி மிக்க காலகட்டத்தில் இடதுசாரிக் கட்சிகள் வகித்த ஏமாற்றம் தரும் நிலைப்பாட்டைப் பற்றிய சிலகருத்துக்களைக் கூற வேண்டும். முதலில் 1963 இலும் பின் 1970 இலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனான காதல் நாடகத்தில் ட்ரொட்ஸ்கியவாத இலங்கைச் சமசமாசக் கட்சியினரும் இலங்கைக் கொம்யூனிஸ்ற் கட்சியினரும் ஈடுபடாதிருந்திருந்தால் இலங்கையின் முழு வரலாறும் வேறு விதமானதாக அமைந்திருக்கும் என்பது எனது நம்பிக்கை. பல அரசியற் சிந்தனையாளர்களதும் ஆய்வாளர்களதும் சிந்தனையும் இதுவேயாகும்.

சுதந்திரத்திற்குப் பிந்திய எல்லாத் தேர்தல்களிலும் ஒன்றுவிட்டு ஒன்றாக இரு பிரதான கட்சிகளில் ஒன்றே மாறி மாறி அதிகாரத்தைக் கைப்பற்றின. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக்கட்சி தொடர்ந்தது. அதனை மீண்டும் சுதந்திரக்கட்சி தொடர்ந்தது. இந்த நிகழ்வில் கடைசிவரை எம்மாற்றமும் நிகழவில்லை. வாக்காளர்கள் ஒரு முறை இவர்களுக்கு வாய்ப்பு வழங்குவோம்; மறுமுறை அவர்களுக்கு வாய்ப்பு வழங்குவோம் என எண்ணினர். வேறு மாற்றுக்கட்சி எதுவும் இல்லாததாலேயே அவர்கள் இம்முடிவுக்கு வரநேர்ந்தது. மக்கள் தங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான மூன்றாவது சக்தியாகத் தம்மை வளர்த்தெடுக்க இடது சாரிகள் தவறிவிட்டனர். பல்வேறு சமூகங்களிடையேயும் வர்க்க உணர்வை விழிப்புறச் செய்ய அவர்கள் தவறிவிட்டனர். தமிழ்த் தொழிலாளர்கள் சிங்களத் தொழிலாளரிடமிருந்து வெகு தொலைவு



பிரிந்து சென்றனர். இவ்வாறே சிங்கள மீனவனுக்கும் தமிழ் மீனவனுக்குமிடையே நீண்ட இடைவெளி இருந்தது. அவர்கள் தொழிலாளரிடையே ஒருமைப் பாட்டை ஏற்படுத்தத் தவறினர். பண்டாரநாயக்கா அம்மையாரின் மயக்கும் ஆற்றலில் அவர்கள் மயங்கிக் கிடந்தபோது மக்கள் அவர்கள் வரலாற்றின் இறுதி இயலை எழுதி முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். இவ்வாறு நடந்திருக்காவிட்டால் அவர்கள் நாட்டின் இரட்சகர்களாக இருந்திருப்பர். நெருக்கடிகளையும் வன்செயல்களையும் உயிரிழப்புக்களையும் அவர்களால் தடுத்து நிறுத்தியிருக்கமுடியும். ஈழத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு எழுதப்படும்போது இடது சாரிக் கட்சியினரின் பங்களிப்புப் பாராட்டும் வகையில் எழுதப் படப்போவதில்லை.

தமிழர் கூட்டணி அதனது மூன்று உறுப்புக் கட்சிகளினதும் இயல்புக்கேற்பச் சாத்வீக இயக்கமாக அமைந்தது. இளைஞர்கள் பிரச்சனைக்குத் தீர்வாகத் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தபோது அவர்களும் அந்த நிலைப் பாட்டை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டனர். வட்டுக் கோட்டைத் தீர்மானம் எனப் புகழ்பெற்றுள்ள ஆவணத்தில் தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாற்றம் பெற்றதோடு அது தமிழர் பிரதேசங்களின் விடுதலைக்காகப் போராடவும் வாக்குறுதி அளித்தது. அதற்கு முன்னோடியாகத் தொடர்ச்சியாக வந்த சிங்கள அரசுகளால் பறிக்கப்பட்ட உரிமைகளை மீட்கவும் முடிவு செய்தது. தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணியாகப் பெயர் பெற்றதேயன்றி தமிழீழ விடுதலைக்கான வழிமுறைகளை எடுத்துரைக்கவில்லை. எனவே அது அறிவு நிலையில் தமிழ் தேசியப் பிரச்சனை பற்றிக் கலந்துரையாடவும் நாட்டின் எதிர்காலம் பற்றியும், இனத்தின் சுயநிர்ணய உரிமை பற்றியும் விவாதிக்கவே அதனால் முடிந்தது. ஈழப்புரட்சி அமைப்பு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழர் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும் முன்னோடியாகக் குரல்



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்தது. தமது மரபுவழித் தாயகத்தைக் கடந்தும் இந்த உரிமை நிலைநாட்ட அவர்கள் உறுதி பூண்டனர். வடக்கு, கிழக்குப் பகுதிகளையும் அதிக தமிழர் வாழும் மத்திய பகுதிகளையும் உள்ளடக்கிய ஈழமே அவர்களது தாயகமாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரை உறுப்பினராகக் கொண்டிருக்கும்போதே அரசு தமிழரின் வாழ்க்கையைச் சீரழிக்கும் கொடிய சட்டங்களை நிறைவேற்றியது. ஆட்சி நடத்தும் தன்னை நலன்புரி அரசு எனக் கூறிக்கொண்டு இரட்டை ஆட்சி நடத்தும்ஒற்றை ஆட்சி அரசியலமைப்பில் சமாதான முறைகளில் அல்லது சனநாயக முறைகளில் உரிமைகளை வென்றெடுப்பது சாத்தியமற்றது. தமக்குரிய தனிநாட்டை உருவாக்குவதே அவர்களுக்குரிய ஒரே வழியாக இருந்தது. கேட்பதனுல் மட்டும் தனிநாடு கிடைத்துவிடாது. ஓர் அடிமை இனத்தை உருவாக்க எல்லாவழிகளிலும் முயலும் நாட்டின் தலைமை தனிநாடமைப்பதை அனுமதிக்கப் போவதில்லை. தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையிலிருந்து மிகப்பெரிதும் வேறுபட்ட தனிநாட்டுக் கோரிக்கையை அரசு எவ்வாறு அனுமதிக்கும்?

தனியரசுக் கோரிக்கை பாராளுமன்றத்தின் மூலமோ வாக்களிப்பு முறையிலோ பெறக்கூடியதல்ல. தமிழரால் மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியும் அசுரப் பெரும்பான்மையால் எளிதில் முறியடிக்கப்பட்டுவிடும். ஆகவே, இளைஞர்கள் தனிநாட்டை – ஈழத்தை - உருவாக்கப் புதிய வழிமுறைகளை நாடவேண்டியவராயினர்.

இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள புத்தி ஜீவிகள் புதிதாக உருவான இளைஞர் சக்தியை ஒன்று திரட்டி பிரச்சனைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வகையில் ஈழப்புரட்சி அமைப்பு முன்னேடியாக அமைந்த பெருமைக்குரியது. ஒரு நிகழ்ச்சித் திட்டத்தை வரைந்தபின் ஈழப்புரட்சி அமைப்பு அதற்கான வழிமுறைகளை உரு



வாக்கத் தொடங்கியது. அதிர்ஷ்டவசமாக ஈழப்புரட்சி அமைப்பின் நிகழ்ச்சித் திட்டம் யதார்த்தமானது என்றும் நிலைமைக்குப் பொருத்தமானது எனவும் உணர்ந்த பல புத்தி ஜீவிகள் அதற்கு ஆதரவு வழங்கினர். ஈழப்புரட்சி அமைப்பு ஈடுபாடுள்ள உறுப்பினர்களைத் தேர்ந்து அனைத்துலகப போராட்டக் களங்களுக்குப் பயிற்சிக்கு அனுப்பியது. பயிற்சி பெற்று மீண்டவர்கள் ஏனைய தோழர்களுக்குப் பயிற்சி அளித்தனர். இவ்வாறு ஸ்ரீலங்கா அரசுப் படைகளுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராட வீரர்படை திரட்டப்பட்டது. இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உருவானது. ஈரோஸ், விடுதலைப் புலிகள் ஆகிய முன்னேடி இயக்கங்களிலிருந்து உருவாகியவையே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழம் மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் என்பன. எனினும் அவை ஒவ்வொன்றும் விடுதலை நோக்கத்துக்காகத் தம்மை உருவாக்கி வளர்ந்து வரும் இயக்கங்கள் என்ற வகையில் பாராட்டுக்குரியவையே.

இவை மாணவரின் ஆர்வத்தைத் தூண்டிவிடும் போதுதான் புரட்சிகர இயக்கங்கள் என்ற பெயருக்கு ஏற்றவையாக உருவாகி வருகின்றன என்று கூறமுடியும்.

காலாதிகாலமாக மாணவரே எதிர்காலச் சிற்பிகள் என்று கூறப்படுவது வழக்கம். ஆனால், இதற்கான உறுதியான சான்றை இன்றுதான் நாம் நடைமுறையிற் கண்கூடாகக் காண்கிறேம். இன்று புரட்சித் தலைவர்களாக உருவாகிய பலர் தமது புரட்சிகர நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகத்தில் அல்லது பாடசாலைகளில் தொடங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று இவ்வாய்ப்பு இங்கு குழுமியிருக்கும் உங்களுக்குக் கிடைத்துள்ளது. உலகிலுள்ள பல்வேறு மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நீக்கும் பொறுப்பு உங்களுடையதாக உள்ளது.



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எமது உரிமைகளை வழங்குமாறுகோரி நீங்கள் துணிகரமாகக் குரல் கொடுப்பீர்களாயின் அதனால் எமது உள்ளம் குளிரும். எமக்கு உலகின் ஆதரவு வேண்டும். உலகின் நல்லெண்ணமும், மானசீக ஆதரவும் எமது போரை நாம் வெல்ல உதவும். ''உலகின் இப்பகுதியில் ஒரு சமூகம் அடிமைப்பட்டு வாழ்கிறது. அது விடுதலைக்காகவும், நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் போராடுகிறது'' என்ற செய்தியை நீங்கள் உலகெங்கும் கொண்டு செல்லவேண்டும்.

வழி நடத்துவது வேறு; முன்னெடுத்துச் செல்வது வேறு. மக்களை வழி நடத்துபவர்கள் மக்கள் தம் சமூக அரசியல் - பொருளாதார விமோசனத்திற்கான ஒட்டுமொத்தமான விடுதலைப் போராட்டத்திற்கு, வகையான போராட்டப் பாதையை வகுக்கவேண்டும். அதற்கேற்ப விடுதலைப் போராட்டப் பாங்கில் ஈடுபட மக்களின் இதர சமூக பிரிவுகளைப் பிரதிபலிக்கும் அணிகளையும், அரசியல் பிரச்சார சபைகளைக் கட்டும் திராணியும் திண்மையும் கொண்ட முன்னோடிகளை உருவாக்கவேண்டும். அந்த முன்னோடிகள் மூலம் அணிகளின் முன்னணி அமைத்து அவற்றினூடாகப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

- இ. இரத்தினசபாபதி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1986 யூன் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 1ஆம் திகதி வரை ஆசியமாணவர் ஒன்றியமும் (ASA), மாணவர் இளைஞர் பொதுமன்றமும் (GUYS) சென்னையில் நடாத்திய ஈழ ஆதரவுவார மகாநாட்டில் ஈழப்புரட்சி அமைப்பின் (EROS) ஸ்தாபகர் தோழர் இ. இரத்தினசபாபதி அவர்களின் சிறப்புரையின் தமிழாக்கமே இச்சிறிய நூலாகும்,

- GUYS -

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்